# 60 லட்சம் டாலர்; 6 கைதிகளுடன் விமானம் புறப்பட்டது!

பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 புரட்டாசி 15 ஷவ்வா 17 இதழ் 231
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 1 10-77

'படிப்பினை'
10 மில்க்வைற் நீல சோப் அல்லது
2 நீம் வாசனை சோப் அல்லது
2 மெடிக்கேட்டட் சோப்
மேலுறைகளை அனுப்பி
மகாத்மாகாந்தியின்
'படிப்பினை' என்ற
நூலைப் பெற்றுக்கொள்ளுங்கள்
விநியோகப்பகுதி
மில்க்வைற்
சவர்க்காரத் தொழிலகம்
த. பெ. எண். 77,
யாழ்ப்பாணம்.

டோக்கியோ, செப். 30 ஜப்பானிய விமானத்தைக் கடத்திய செம்படையினரின் கோரிக்கைமீது ஆறு கைதிகளையும் 60 லட்சம் டாலர் பணத்தையும் சுமந்துகொண்டு இன்று நள்ளிரவு விசேஷ விமானமொன்று டோக்கியோவை விட்டு டாக்கா நோக்கிப் புறப்பட்டது.

இந்த விமானத்தில் ஜப்பானிய போக்குவரத்து அமைச்சரும் மற்றும் சில உயர் அதிகாரிகளும் உள்ளனர்.

கடத்தல்காரர்கள் விதித்த காலக்கெடுவுக்கு ஏழு மணி நேரம் தாமதித்தே இந்த விசேஷ விமானம் புறப்பட்டது. இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை ஜப்பானியவிமானம் டாக்கா வந்துசேரவில்லை. டாக்காவில் 'நிலைகொண்டிருக்கும்' விமானத்திலும் எந்தவித அசம்பாவிதமும் ஏற்படவில்லை. பணத்தையும் தங்களின் "வீரர்களை"யும் கடத்தல்காரர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

(முன்வந்த செய்தி)

ஜப்பானிய விமானக்கடத்தல்காரர்கள் தமது காலக்கெடுவை மேலும் நீடித்துள்ளனர்.

கடத்தல்காரர்கள் தாம் கோரிய 60 லட்சம் அமெரிக்க டாலரைக் கொடுக்க நாளை மாலை மூன்றரைமணிவரையும் ஜப்பானில் உள்ள கைதிகள் டாக்கா வந்து சேருவதற்கு திங்கட்கிழமை வரையும் அவகாசம் கொடுத்துள்ளனர்.

இதேவேளையில் ஜப்பானில் சிறைவைக்கப்பட்டுள்ள 9 செஞ்சேனைவீரர்களில் 3 பேர் கடத்தல்காரர்களுடன் சேர மறுப்புத் தெரிவித்துள்ளனர். மிகுதி ஆறுபேரும் கடத்தல்காரருடன் சேர இணக்கம் தெரிவித்துள்ளனர்.

கடத்தல்காரரின் கோரிக்கைகளுக்கு இணங்கியமைக்காக ஜப்பானிய நீதியமைச்சரும் உதவி நீதியமைச்சரும் தமது பதவிகளை ராஜினாமாச்செய்துள்ளனர்.

இவ்வாறு தாம் ராஜினாமாச் செய்தது கடத்தல்காரரின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டமைக்கு எதிரானதல்ல என்றும் இவ்வாறான நிகழ்ச்சிகடந்தால் இதற்கான பொறுப்பை ஏற்றுக்கொண்ட அமைச்சர்கள் ராஜினாமாச் செய்வது வழமை என்றும் ஜப்பானிய நீதியமைச்சர் தெரிவித்தார்.

### தமிழர் விடுதலைக் கூட்டணியின்

# நடவடிக்கைக்குழு இன்று கூடுகிறது!

## அரசியல் அமைப்புத் திருத்தம்; மாவட்ட மந்திரிப்பதவிகள் பற்றி ஆலோசிக்கப்படும்

யாழ்ப்பாணம், சனி

அரசியல் அமைப்புத் திருத்தம், மாவட்ட மந்திரிப்பதவிகள் மற்றும் தமிழர் பிரச்னைகள் பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணிகூடி ஆலோசிக்கவிருக்கிறது.

தமிழர் விடுதலை கூட்டணி நடவடிக்கை குழுவின் வடமாகாண உறுப்பினர்கள், இன்றுமாலை யாழ்ப்பாணத்தில் உள்ள கூட்டணி தலைமைக் காரியாலயத்தில் கூடி ஆலோசிக்கவிருக்கிறார்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி நடவடிக்கைக் குழுவின் கிழக்கு மாகாண உறுப்பினர்கள் கொழும்பில் திரு. சிவசிதம்பரத்தின் இல்லத்தில் இம்மாதம் 3-ம் தேதி கூடி ஆலோசிக்கவிருக்கிறார்கள்.

இவ்விரு கூட்டங்களிலும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் திரு. எஸ். தொண்டமான் கலந்துகொள்வார் எனத் தெரியவருகிறது. (க)

### கருணாநிதி மீது

## விசாரணைக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியது

### தமிழக நிதி அமைச்சர் தகவல்

சென்னை, செப். 30

சர்க்காரியா கமிஷன் விசாரணையின் அடிப்படையில் தமிழ்நாடு முன்னாள் முதல்வரும் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவருமான திரு. மு. கருணாநிதி மீது தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க உள்ளது.

தமிழ்நாடு நிதிஅமைச்சர் திரு. கே. மனோகரன் பத்திரிகையாளரிடம் இத்தகவலைத் தெரிவித்தார்.

திரு. மு. கருணாநிதிமீது விசாரணை நடத்துவதற்காக தமிழ்நாடு அரசுக்கு மத்திய அரசின் அனுமதி ஏற்கனவே கிடைத்துவிட்டது என்றும் திரு. மனோகரன்தெரிவித்தார்.

திரு. மு. கருணாநிதி மீதும் அவரது சக அமைச்சர்கள் மீதும் சுமத்தப்பட்ட ஊழல், அதிகார துஷ்பிரயோகம் ஆகிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக விசாரணைசெய்து வந்த சர்க்காரியா கமிஷன் கடந்தவாரம் தனது விசாரணையை முடித்துக்கொண்டு விசாரணை அறிக்கை நவம்பர் மாதத்திற்கு முன்னர் வெளியிடப்படுமென அறிவித்திருந்தது தெரிந்ததே. (இ)

### கடற்றொழில் அமைச்சர்

கொழும்பு, வெள்ளி

பதில் நிதி அமைச்சர் திரு பெஸ்டஸ் பெரேரா கடற்றொழில் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### வவுனியாவில்

## 35 தமிழ்க் குடும்பங்கள் குடியமர்த்தப்படும்

### ஊற்று நிறுவனம் நடவடிக்கை

யாழ்ப்பாணம், சனி

வவுனியாப்பகுதியில் அகதிகளாக வந்துள்ள 35 தமிழ்க் குடும்பங்களைக் குடியமர்த்துவதற்கு ஊற்றுநிறுவனத்தினர் முயற்சி எடுத்துவருகின்றனர்.

இது தொடர்பாக ஊற்று நிறுவனத்தைச் சேர்ந்த பிரமுகர்களும், தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் திரு. கே. சி. நித்தியானந்தாவும் அண்மையில் வவுனியாவுக்குச் சென்று ஆராய்ந்தனர்.

பூதான இயக்கம் மூலமாக இதற்குக் காணி பெறுவதற்கும் முயற்சி எடுக்கப்படுகின்றது.

இடம்பெயர்ந்து அகதிகளாக வந்துள்ள இந்திய வம்சாவளியினரான 35 குடும்பங்களை சுமார் 100 ஏக்கர்காணியில் குடியமர்த்துவதற்கு ஊற்றுநிறுவனம் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன் முயன்றுவருகிறது. இந்தத் திட்டத்துக்கான நிதி மற்றும் அகதிக் குடும்பங்களை ஏற்பாடு செய்வது போன்றவற்றை தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் கவனத்திற்கொண்டு இத்திட்டத்தின் ஏனைய விஷயங்களை ஊற்று நிறுவனம் கவனித்துக்கொள்ளும் என்று தெரிகின்றது. இதற்காக ஒரு லட்சம் ரூபாய் நிதி திரட்டுவதற்காக டிக்கட் விற்பனைத்திட்டம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஒரு டிக்கற் ஒரு ரூபாய் வீதம் பாடசாலைகள் கல்லூரிகளிலும், பொதுமக்கள் மத்தியிலும் விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## இடமாற்றம் வழங்கப்படும்

கொழும்பு, வெள்ளி

பிராந்திய பணிமனைகளிலிருந்து இடம்பெயர்ந்துள்ள பாதிக்கப்பட்ட உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஊழியர்களுக்கு கொழும்பிலுள்ள அலுவலகங்களில் இடமாற்றம் வழங்கப்படும். கொழும்பிற்கும் செல்ல முடியாத நிலையிலுள்ளவர்களை யாழ்ப்பாணம், மட்டக்களப்புக்கு அனுப்புவதுபற்றி ஆலோசிக்கப்படும்.

உள்நாட்டு இறைவரியிடம் சேவைச்சங்க தூதுகோஷ்டி இன்றுகாலை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் அதிபதி மேற்கண்ட உறுதியை அளித்தார்.

இத்தொழிற்சங்க தூதுகோஷ்டி இன்றுகாலை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் அதிபதியைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியது. இப்பேச்சுவார்த்தையில் செப்டம்பர் மாதச் சம்பளம், இத்திணைக்களத்தின் இடம்பெயர்ந்து வந்துள்ளவர்களுக்கு உடனடியாக அனுப்பி வைக்கப்படும் ... பிராந்திய ... லிருந்து பாதிக்கப்பட்ட ஊழியர்கள், சம்பளத்தை ... எலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஊழியர்களின் இடமாற்ற

(6-ம் பக்கம் பார்க்க)

### பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர் நிலை:

# பிரதமரை ஆசிரியர் சங்கம் சந்தித்தது

யாழ்ப்பாணம், சனி

கலவரங்களினால் பாதிப்புற்ற தமிழ் ஆசிரியர் நிலை குறித்து இலங்கை தமிழர் ஆசிரியசங்க ஐவர் குழுவொன்று, பிரதம மந்திரியையும் கல்வியமைச்சரையும், நிரந்தர செயலாளரையும் சந்தித்து ஆராய்ந்தது.

கல்வியமைச்சருடனும் கல்வி நிரந்தர செயலாளருடனும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை உறுப்பினர்களுக்கு அறிவிப்பதற்கான விசேட கூட்டமொன்று நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு யாழ் வீரசிங்கம்மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (கெ)

### இறைவரித் திணைக்கள தூதுகோஷ்டி

## பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்தது

யாழ்ப்பாணம், சனி

உள்நாட்டு இறைவரிச் சேவைச் சங்கத்தின் பிரதிநிதிகள் கோஷ்டியொன்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்து பாதிக்கப்பட்ட உள்நாட்டு இறைவரி திணைக்கள ஊழியர்களைச் சந்தித்து அவர்கள் பிரச்னைகளை நேரில் அறிந்து கொண்டது.

உள்நாட்டிறைவரி சேவை சங்கத்தின் பிரதிநிதிகளான சங்கச் செயலாளர், டி. எம். எஸ். முனசிங்கா, திரு. வி. வித்தியசேகரா, திரு இராஜலிங்கம் ஆகியோர் இக் கோஷ்டியில் வந்திருந்தனர்.

யாழ் வீரசிங்கம் மண்டபத்தில், பாதிக்கப்பட்ட உள்நாட்டு இறைவரி திணைக்கள ஊழியர்கள் அனைவரையும், இக்கோஷ்டியினர் சந்தித்தனர்.

இக்கோஷ்டியினர் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு தமது அனுதாபத்தை தெரிவித்தனர். பாதிக்கப்பட்ட ஊழியரின் பிரச்னைகள், உடனடியாக உள்நாட்டு இறைவரி திணைக்கள ஆணையாளரிடம் தெரிவித்து அவர்களுக்கு நிவாரணம் பெற்றுத் தருவதாக அக்கோஷ்டியினர் உறுதி

(6-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல நிலையில் முக்கியமான உதிரிப் பாகங்களுடன் CN ஏழாயிரம் இலக்கத் தொடரில் ஸ்கோடா (SCODA) கார் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க. தொலைபேசி இலக்கம் 7445; (யாழ்ப்பாணம்) 7237

கல்வியங்காட்டில் 12 பரப்புக் காணியும் பெரிய வீடும் விற்பனைக்குண்டு துண்டுகளாகவும் வாங்கலாம். விபரங்களுக்கு 93, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 7230

அதிக நெல் விளைச்சலுக்கு நீரியா பசளையை வயல்களுக்கு பாவியுங்கள். தயாரித்து விற்பனை செய்வோர் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம். 7243

வேம்பு, தேக்கு மரத்தாலான 10'×7' விசாலமான புதிய கண்ணாடி அலுமாரிகள், 5 கைத்தறிகள் கோட்டாவுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: வ. சிவயோகநாதன், தபாற்கந்தோருக்கு அருகாமையில், மானிப்பாய். 7240

## தேவை

சோடா விற்பனை வாகனத்திற்கு சோடா பெட்டி ஏற்றி இறக்கி விற்பனை செய்ய அனுபவமுள்ள ஓட்டுநர் தேவை. நேரில் வரவும். "பிள்ளையார் ஸ்ரோர்ஸ்", இல: 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 7233

வேப்பம்விதை, ஆமணக்கம் விதை, [illegible] நிலக்கடலை, எள்ளு, இறப்பர் விதை, பருத்தி விதை தொகையாகவும் சில்லறையாகவும் திருப்தியான விலைக்குப் பெற்றுக்கொள்ளப்படும். விலை விபரத்துடன் உடனே தொடர்பு கொள்ளவும். பொ(B)பி இன்டஸ்றீஸ், ஆனைக்கோட்டை. 7222

இலங்கை வங்கி கனிஷ்ட லிகிதர்/உதவிக் காசாளர் பதவிகளுக்கான விண்ணப்பப் படிவம் தமிழிலும் ஆங்கிலத்திலும் தனித்தனி 50 சதம். விபர இதழ் 15 சதம். தபாலில் பெறுவதற்குத் தேவையான படிவங்களின் பெறுமதிக்கு முத்திரைகளும், 15 சத முத்திரை ஒட்டிய என்வலப்பும் அனுப்புக. ஆனந்தா புத்தகசாலை, 226, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 7244

## தேவை

வேப்பம்கோது, எலுமிச்சம் கோது நன்கு காய்ந்தது தேவை. தொடர்பு கொள்ளுங்கள். மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம். 7242

ஆங்கில மருந்துக் கடை ஒன்றிற்கு ஆங்கிலம் பேச வாசிக்கத் தெரிந்த ஆண் பெண் இருபாலாரும் தேவை விபரங்கட்கு: சி. மகேந்திரன், 230, பிரதானவீதி, சுன்னுகம். 7248

யாழ்பபாணத்தில் வீடு வாடகைக்கு உடனடியாகத் தேவை. எஸ். மகேந்திரா, தொலைபேசி 7614, மக்கள்வங்கி, பிராந்திய காரியாலயம், யாழ்ப்பாணம். 7249

## வாடகைக்கு

கிளிநொச்சியில வாடகைக்கு வியாபாரஸ்தலம் எவ்விதமான வியாபாரத்துக்கும் தகுந்ததும், முக்கியமான இடத்தில் அமைந்ததுமாகும். தேவையானோர் கடிதமூலம் அல்லது நேரில் பேசிக்கொள்ளவும். வ. டகிரதன், 20/9, வைரவர்கோவில் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். 7250

## கல்வி

G. C. E. (A/L, O/L) விஞ்ஞான, வர்த்தக, கலைவிசேட வகுப்புக்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர்களாலும் விசேட பட்டதாரிகளாலும் சனி, [illegible] மாலை நேரங்களிலும் நடாத்தப்படும். ஆரம்ப திகதி 8-10-77. யாழ்ப்பாண கல்வி நிலையம். 22, இராமையா செட்டியார்லேன், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 7256

### காணி விற்பனை

இணுவில் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் றேட்டு முகப்புடன் 7 பரப்புக் காணி விற்பனைக்கு இருக்கின்றது. மாணிக்கவாசகர், ஸ்ரேசன் வீதி, கொக்குவில். 7189

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

### கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: ஈடு 13897

யோசேப்பு அன்ரன் ஜெராசா மகர் உர்சுலா பீரியர் சினி, இல. 5, முதலாம் மாடி. அரசினர் சட்டிடம் "K" புளொக், கொழும்பு. — வாதி

எதிராக

1. வஸ்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை சுவாம்பிள்ளையும்
2. பெண் மேரி மர்கிறட், இல. 24, நக்கா வீதி, யாழ்ப்பாணம். — பிரதிவாதிகள்

யாழ்ப்பாணம டிஸ்திறிக் கோட்டின் இல. ஈடு 13897ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் காணியை 1977ம் ஆண்டு ஐப்பசி மாதம் 8ம் திகதி (8-10-77) சனிக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 37263/90 சதம் 16-6-73 தொடக்கம் 14-11-74 வரைக்கும் ரூபா 30000/-க்கு 9 வீத வட்டியும் அதற்குப்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் வழக்குச்செலவு ரூபா 903/01சதம் செலவுத்தொகையில் ரூபா 250/- கட்டப்பட்டது.

#### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக், யாழ்ப்பாணப் பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று. 'ஒடைத்தோட்டம்' நிலப்பரப்பு 11ம் குளி 5¾ம் இதில் வடக்குப்புறமாக நிந்தமாக நிலப்பரப்பு ஏழும் (7) இதற்குச் சேர்ந்த சகல உருத்துக்களும். இந்த நிலப்பரப்பு ஏழுக்கும் எல்லை கிழக்கு: முடிக்குரிய நிலம், வடக்கு: நக்கா ரேட்டு, மேற்கு: சோமசுந்தரம் ஒழுங்கை. தெற்கு: ஈடுகொடுப்பவர்கள் 2, அந்தோனிப்பிள்ளை சுவாம்பிள்ளையும் பெண் மேரி மர்க்றெட்டுக்குரிய இதன் மிகுதியாதனம். இவ்வெல்லைக்குட்பட்டவை அடங்கலும்.

வே.கோபாலபிள்ளை,
விற்பனவுக்கொமிஷனரும்,
விலைமதிப்பாளரும்.

22, ஆஸ்பத்திரிவீதி,
கொட்டடி.
யாழ்ப்பாணம். 7251

---

க, சற்குணநாதன்,
சட்டத்தரணி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

### இடைக்கால கட்டளை

இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

யாழ்ப்பாணம், கண்டி வீதி, 224-ம் இலக்கத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சோமசுந்தரம் என்பவரின் கடைசி விருப்ப மரணசாதனம் சம்பந்தமானது

காலஞ்சென்றவர்

வலயம்: யாழ்ப்பாணம்
இல: 394

யாழ்ப்பாணம் கண்டி வீதி, 224-ம் இலக்கத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சோமசுந்தரம் கைம்பெண் இரத்தினம்மா.

மனுதார்.

மற்றும்

1. நாகலிங்கம் செல்வராசா, முள்ளி ஒழுங்கை, ஆத்திக்காடு, அரியாலை.
2. செல்லையா முத்துச்சாமி, ஆனந்தவடலி வீதி, அரியாலை.
3. இரத்தினமும்,
4. பெண் அன்னபூரணமும், பொன்னம்பலம் வீதி, அரியாலை.
5. தம்பிப்பிள்ளை ஆசிரியரும்,
6. பெண் கனகம்மாவும், முள்ளிக்காடு, அரியாலை.
7. இரத்தினமும்,
8. பெண் சின்னம்மாவும், நெடுங்குளம் வீதி, அரியாலை.
9. நாகலிங்கம் கனகரத்தினம், ஆத்திக்காடு, அரியாலை.
10. வேலுப்பிள்ளை சின்னத்தம்பியும்,
11. திருமதி வேலுப்பிள்ளை சின்னத்தம்பியும், நெடுங்குளம் வீதி, அரியாலை.
12. துரைச்சாமி செல்வநாயகம்,
13. துரைச்சாமி மகேஸ்வரி,
14. துரைச்சாமி கமலாம்பிகை, எல்லோரும் பொன்னம்பலம் வீதி, அரியாலை.

எதிர்மனுதார்

1973-ம் 44-ம் இலக்க நீதி நிருவாகச் சட்டத்தின் 260-ம் பிரிவின் கீழ் தாக்கல் செய்யப்பட்டதும் 1977-ம் ஆண்டு ஆவணி 12-ந் திகதியிடப்பட்டதுமான விண்ணப்பத்திலிருக்கும் கூற்றுக்கள் முதற்றேற்றமளவில் நிரூபிக்கப்பட்டுள்ளதெனத் திருப்தியடைந்ததின் பேரில் யாழ்ப்பாண நீதிநிருவாக வலயத்தின் தத்துவப்பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளையாகிய நான் எவராவது 1977-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 6-ந் திகதியன்று அல்லது அதற்கு முன் எதிர்க்காரணம் காட்டினாலன்றி 31-12-71-ந் திகதியிடப்பட்ட 962-ம் இலக்கத்தைக் கொண்டதும் பிரசித்த நொத்தாரிஸ் இ. இராசா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் இப்போது இவ்வலுவலகத்தில் வைப்பிலிடப்பட்டதுமான மரணசாதனம் நிரூபிக்கப்பட்டிருக்கிறதெனவும் மேற்சொன்ன மனுதாரே குறித்த மரணசாதனத்தில் சொல்லப்பட்ட நிறைவேற்றுனர் என்றும் மேற்படி மரணசாதனத்தின் மீதான மரணசாதன அதிகாரப்பத்திரம் சொல்லப்பட்ட மனுதருக்கே முறைப்படி வழங்கப்படுமென்றும் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் செயற்பட்டு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

ஒப்பம்
கா. கணபதிப்பிள்ளை,
தத்துவப்பத்திர அதிகாரி,
12-8-77. 7253

---

பொ. கணபதிப்பிள்ளை,
சட்டத்தரணி,
பருத்தித்துறை.

283-ம பிரிவின் கீழான

### இடைக்காலக் கட்டளை

இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

வலயம்: யாழ்ப்பாணம்
இல. 368

கரணவாய் வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி கந்தையா முருகேசுவின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்கள் சம்பந்தப்பட்டவை.

காலஞ்சென்றவர்

கரணவாய் வடக்கு சி. கந்தையா முருகேசு கைம்பெண் சரஸ்வதி.

விண்ணப்பக்காரி

எதிராக

கொற்றுவத்தை கரணவாய் வடக்கு

1. முருகேசு தில்லையநாதன்.
2. முருகேசு சுண்முகநாதன்.
3. முருகேசு இராமநாதன்.

பிரதிவாதிகள்

1973-ம் ஆண்டு வைகாசி மாதம் 31-ந் திகதியைக் கொண்ட 281-ம் பிரிவின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தின் உறுதிக்கூற்றுக்கள் பார்த்த மாத்திரத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளதெனத் திருப்தியடைந்ததன் பேரில் யாழ்ப்பாண நீதி பரிபாலன தத்துவப்பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளையாகிய நான் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பேரில்.

1977-ம் ஆண்டு ஆவணி மாதம் 26-ந் திகதி அல்லது அதற்கு முன்பாக ஆட்சேபம் தெரிவித்தாலன்றி மேற்சொல்லப்பட்ட காலஞ்சென்றவர் விட்டுச்சென்ற மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்களுக்கும் மற்றும் பெறுமதிகளுக்கும் நிருவாகப்பத்திரம் பெறுவதற்கு மேற்சொல்லப்பட்ட விண்ணப்பகாரியேதத்துவகாரி என்ற வகையில் உரித்துடையவரென்றும் அவ்வண்ணமே அவவுக்கு நிருவாகத் தத்துவப் பத்திரம் வழங்கப்படுகிறதென்றும் கட்டளையிடுகிறேன்.

ஒப்பம்
கா. கணபதிப்பிள்ளை
தத்துவகார அதிகாரி,
யாழ்ப்பாணம்.

1977-ம் ஆண்டு
வைகாசி மாதம் 30-ந் திகதி.
26-8-77
மறுதவணை 7-10-77

ஒப்பம்
கா. கணபதிப்பிள்ளை
தத்துவகார அதிகாரி.
7259

### அறிவித்தல்

இடம்பெயர்ந்த மருந்தாளர் சங்கம்

இடம்பெயர்ந்த அரச மருந்தாளரின் இடமாற்றத்திற்கான விண்ணப்பப்பிரதியை இன்றுமாலை 4 மணிக்கு முன் தாய்ச் சங்கத்தின் நடவடிக்கைக்காக உடன் சமர்ப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

இ. மகேந்திரன்
(இணைச்செயலாளர்)
மருத்துவமனை,
யாழ்ப்பாணம். 7268

---

### பஸ் சேவை ஆரம்பம் இன்று அல்ல

யாழ்ப்பாணம், சனி

சுழிபுரம் கண்ணகை அம்மன் கோவிலிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு விரைவில் பஸ் சேவை ஒன்று ஆரம்பிப்பதற்கு காரைநகர் டிப்போ ஏற்பாடுகள் செய்து வருவதாகவும் நேற்றைய ஈழநாடு பத்திரிகையில் வெளிவந்த செய்தியின்படி இன்று இச்சேவையை ஆரம்பிக்க எவ்விதமுடிவும் எடுக்கப்படவில்லை என்றும் காரைநகர் சாலை அதிபர் திரு க. தியாகராஜா தெரிவித்தார்.

இப்புதிய சேவை ஆரம்பிக்கப்படும் திகதி உரிய காலத்தில் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ)

### விசாரணைகள் துரிதம்

பண்டத்தரிப்பு, வெள்ளி

கந்தரோடை கார் கடத்தல் சம்பவம் தொடர்பாகப் பொலிசார் தீவிர புலன் விசாரணைகள் மேற்கொண்டுள்ளனர்.

குறிப்பிட்ட காரில் கையடையாளங்கள் உள்ளனவா என்பதுபற்றி ஆராய கையடையாள நிபுணர் அங்கு வருவார் என பொலிசார் தெரிவித்தனர்.

கந்தரோடையில் துப்பாக்கி முனையில் கடத்தப்பட்ட இக்கார் பெரியவிளானில்கைவிடப்பட்டிருந்தது.

சுன்னுகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜனாப் ஈ. ஏ. ஏ. காதர் தொடர்ந்து துரித விசாரணைபுரிகின்றார். (உ)

### முடிவு

யாழ்ப்பாணம், சனி

அரசாங்கம் கேட்டுக்கொண்ட படி பாதிக்கப்பட்ட அரசாங்க தமிழ் ஊழியர்களாக கடல்கடந்த தொலைத்தொடர்பு ஊழியர்கள்சேவைக்குச் செல்லாமல் இடமாற்றத்திற்கு விண்ணப்பித்து பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்கழகத்திற்கு முழு ஆதரவையும் வழங்குவதென பாதிக்கப்பட்ட கடல் கடந்த தொலைத்தொடர்பு தமிழ் ஊழியர் கழகம் முடிவுசெய்துள்ளது.

இக்கூட்டம், யாழ். வின்சர் திரையரங்கு மேன்மாடியில் திரு. சண்முகராஜா தலைமையில் நடைபெற்றது. (உ)

### மாநாடு

வேலணை, வெள்ளி

மண்டைதீவு, அல்லைப்பிட்டி, வேலணை, புங்குடுதீவு, நயினுதீவு ஆகிய கிராம சபைகளின் விசேட ஆணையாளரான வேலணை உதவிஅரசாங்க அதிபர் திரு. மு. சுப்பிரமணியம் எதிர்வரும் 4ம் திகதி மேற்படி கிராம சபைகளின் பிரதம லிகிதர்கள் மற்றும் ஊழியர்கள் அடங்கிய மாநாடு ஒன்றை நடாத்தவிருக்கின்றார்.

இக்கருத்தரங்கில் இதுவரை செய்யப்பட்ட வேலைத்திட்டங்கள், செய்யப்படவேண்டிய திட்டங்கள், வேலைகள் முதலியனவற்றைப்பற்றி ஆராய்ந்து அதற்கான நடவடிக்கைகளையும் விசேட ஆணையாளர் தீர்மானித்திருக்கிறார்.

---

### அறிவித்தல்

வன்செயல்களால் பாதிப்படைந்து தமது வேலை ஸ்தலங்களுக்குச் செல்லமுடியாத ஆசிரியர்களின் இடமாற்றம் குறித்து இலங்கைத் தேசிய ஆசிரியர் சங்கத்தின் (ஸ்ரீ. ல. ஜா. கு. ச) பிரதிநிதிகள் 02-10-77 ஞாயிறு காலை 10 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை யாழ்ப்பாணம் பெரியகடை பாரதி பாஷிய வித்தியாலயத்தில் ஆசிரியர்களைச் சந்திப்பர். சம்பந்தப்பட்டோர் சமுகம் தரவும்.

வ. கிருஷ்ணபிள்ளை,
உபதலைவர்,
இலங்கைத் தேசிய ஆசிரியர் சங்கம்.
7258

கங்கைநீர்ப் பிரச்னை:

# இந்தியா - பங்ளாதேஷ் உடன்படிக்கை கைச்சாத்து

## விபரம் பின்னர் வெளியாகும்

புதுடில்லி, செப்.30 இந்தியாவுக்கும் பங்களாதேஷுக்கும் இடையே கங்கைநீரைப் பகிர்ந்து கொள்வது தொடர்பான சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பந்தம் இன்று அதிகாலை புதுடில்லியில் கைச்சாத்தானது.

இந்த ஒப்பந்தம் இருநாடுகளுக்குமிடையிலான ஒத்துழைப்பின் புதிய சகாப்தம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது என்று ஒப்பந்தம் கைச்சாத்தானதும் இருநாட்டு அதிகாரிகளும் இணைந்து விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

ஒப்பந்தவிபரம் பின்னர் அறிவிக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டது.

கங்கை நீரைப் பகிர்ந்து கொள்வது தொடர்பான ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்வதற்கு நீண்ட நாட்களாக இரு நாடுகளுக்குமிடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வந்தது தெரிந்ததே.

இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று ஏற்கனவே இரு நாடுகளுக்குமிடையே செய்யப்பட்டுள்ளதாக அண்மையில் ஒருசெய்தி வெளிவந்திருந்தது. அச்செய்தியைப் பின்னர் இரு நாடுகளும் மறுத்திருந்தன.

## பூட்டோவின் மகளுக்கும் வீட்டுக்காவல்!

இஸ்லாமாபாத், செப்.30

பாகிஸ்தான் பிரதமர் ஜனாப் சுல்பிகார் அலிபூட்டோவின் புதல்வி செல்வி பெனுஸிர் பூட்டோவும் தற்போது வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

வன்முறையைத் தூண்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்ற காரணத்தினாலேயே செல்வி பூட்டோ (வயது-24) வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பாக். இராணுவபீடம் அறிவித்துள்ளது.

## "பதவிக்காக எம். ஜி. ஆரை மிரட்டியவர் மனோகரன்"

### கலைஞர் கருணாநிதி கூறுகிறார்

சென்னை, செப். 30 "கோப்பு, கோப்பு என்று கூவியவர்கள் இப்போது "டேப்பு, டேப்பு" என்றுபேச ஆரம்பிக்கிறார்கள். உங்களிடம் இருக்கிற டேப்பையும் கொண்டுவாருங்கள். என்னிடமிருக்கும்டேப்பையும்கொண்டு வருகிறேன். யார் தூது அனுப்பியது, தெரியாதா? தனக்கு நிதியமைச்சர் பதவி தராவிட்டால் தி. மு. கழகத்தில் சேர்ந்து விடுவேன் என்று சொல்லி அது சம்பந்தமாக தூது அனுப்பியதை மனோகரன் மறந்து விட்டாரா?" என்று கலைஞர் மு. கருணாநிதி வில்லிவாக்கத்தில் நடைபெற்ற டி. எம். பார்த்தசாரதி விழாவில் கேட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

எத்தனையோ கடும் சோதனைக்(இ)கிடையேயும் தி. மு. கழகம் தனியேநின்று 42 லட்சம் பேருடைய வாக்குகளைப் பெற்றது. தன்னலமற்ற பணியே இதற்கு காரணமென்றால் மிகையாது. இப்படிப் பட்டவர்களைக் கொண்ட தி. மு. க. வை, ஏதோ இன்று ஆட்சிக்கு வந்த அ. இ. அ. தி. மு. க. வோடு வந்து இணைந்துகொள்கிறோம் என்று நாங்கள் விண்ணப்பம் செய்ததாக நிதியமைச்சராக இருக்கிற நண்பர் மனோகரன் பேசியதாக இன்றைய ஆங்கில நாளேடுகளில் செய்தி கூறுகின்றது.

தி.மு.க. வரலாற்றுக் குறிப்பை எழுதிய ஒரு ஆசிரியருக்கு நடைபெறுகின்ற வரவேற்புவிழாவில் இப்படியான செய்தி எதிர்காலத்தில் மனோகரன் போன்றவர்களாலும் வரக்கூடாதென இங்குசொல்லி வைக்கின்றேன்.

ஆனால் மனோகரன் 'கருணாநிதி தூதர்களை அனுப்பினார்: அவர்கள் வந்து எம். ஜி. ஆரோடு அதுபற்றி பேசினார்கள் அதையெல்லாம் டேப் செய்து வைத்திருக்கின்றோம் என்று பேசியிருக்கிறார்.

இப்படித்தான் நாலுவாரங்களுக்கு முன்னால் எங்களிடம் பைல்கள் இருக்கின்றன, அவைகளைக் கருணாநிதி பார்க்கத் தயாரா யார் யார் மீது என்னென்ன வழக்கு இருக்கின்றதென்பதை ஆதாரம் இருக்கின்றது, அந்தப் பைல்களை தானும் முதலமைச்சரும் உட்கார்ந்து பார்க்க ஏற்பாடு செய்கிறேன். இதற்கு கருணாநிதி தயாரா என மனோகரன் கேட்டார்.

இதற்குப் பதிலளித்த நான் அந்தப் பைல்களைப் பார்க்கத் தயார். அந்தத் தேதி எத்தனை மணி எந்த இடமென உடனடியாகக்குறிப்பிட்டுதெரிவிக்கவும் என அப்போது பதில் சொன்னேன் இப்போது பைலைவிட்டுவிட்டார். கோப்பு இருக்கிறது என்றார் இப்போது

(5-ம்பக்கம் பார்க்க)

4 உயர் அதிகாரிகள் மீது

# மகனுக்காக இந்திரா பொய்வழக்குப்போட்டாராம்

## அவரது சகஅமைச்சரே கூறுகிறார்

புதுடில்லி, செப்.30 முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி தாம் ஆட்சியிலிருந்தபோது தமது மகன் சஞ்சய் காந்திக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் நான்கு உயர் அதிகாரிகள் மீது பொய் வழக்குகளைச் சோடித்தார் என்று இந்திராவின் அமைச்சரவையிலிருந்த அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நெருக்கடி நிலை ஊழல் தொடர்பாக விசாரணை செய்துவரும் ஷா கமிஷன்முன் சாட்சியமளிக்கையிலேயே முன்னாள் கனரகத் தொழில் அமைச்சர் திரு. ரி. ஏ. பய் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சஞ்சய் காந்தியின் மாருதி நிறுவனத்தின் ஊழல் நடவடிக்கை தொடர்பான பல தகவல்களைச் சேகரித்தார்கள் என்பதற்காகவே அந்த அதிகாரிகள்மீது திருமதி காந்தி பொய் வழக்கைச் சோடித்திருந்தார் என்றும் அந்நாட்களில் திருமதிகாந்தி ஆத்திரம் கொண்டிருந்தாரென்றும் திரு பய் தெரிவித்திருந்தார்.

## "அண்ணாவை சந்தைப்பொருள் ஆக்கிவிட்டார் எம். ஜி. ஆர்."

### தி. மு. க. எம். எல். ஏ. தாக்கு

சென்னை, செப். 30 பேரறிஞர் அண்ணா இந்தப் பூபாகத்தின் எங்கெலாம் தமிழர் இருக்கின்றார்களோ, அங்கெல்லாம் அவர்களின் உணர்வுகளில் எல்லாம் கலந்து ஜனநாயகவாதிகளின் உள்ளமெல்லாம் நீக்கமறநிறைந்து திகழும் பெருந்தகையாளர், தமிழினத்தின் தன்னிகரற்ற தலைவர். ஆனால் தமிழர்களின் தலைவிதி. அவரது பெயர் அரசியல் வியாபாரிகளால் இன்று சந்தைப் பொருளாகிவிட்டது. இந்நிலையை இனியும் அனுமதிக்கமுடியாதென தமிழகசட்ட மன்ற உறுப்பினர் ஜனாப் ரகுமான் கூறினார்.

தி மு. க. ஆதரவில் சென்னை 84-வது வட்டத்தில், நடைபெற்ற பேரறிஞர் அண்ணா விழாவில் கலந்துரையாற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது:

"அறிஞர் அண்ணா ஒரு சிந்தனையாளனின் கண்ணோட்டத்தில் சீரிய சிந்தனையாளராகவும், எழுத்தாளரின் கண்ணோட்டத்தில் எழுத்தாளனாகவும், பேச்சாளனின் கண்ணோட்டத்தில் பேச்சாளனாகவும், சமூக சீர்திருத்தவாதியின்கண்ணோட்டத்தில் சமூகசீர்திருத்தவாதியாகவும், பகுத்தறிவாளரது கண்ணோட்டத்தில் பகுத்தறிவாளராகவும், மனிதாபிமானிகளின் இதயத்தில் மனிதாபிமானியாகவும், ஜனநாயகவாதிகளின் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட ஜனநாயகவாதியாகவும், சோஷலிஸ்ட் வாதிகளின் இலட்சியநோக்கில் சோஷலிஸ்ட்டாகவும் திகழ்ந்தார்.

ஒரு மலரைப் பார்க்கின்ற பக்தனைப்போல, காதலனைப் போல, விஞ்ஞானியைப்போல

(5-ம் பக்கம்பார்க்க)

# பாக். பொதுத்தேர்தல் ஒத்திவைக்கப்படலாம்

## குழப்பநிலை நீடிப்பே காரணம் என்கிறார் இராணுவத்தளபதி

இஸ்லாமாபாத், செப்.30 பாகிஸ்தானில் தொடர்ந்து குழப்பநிலை இருந்து வருவதனால் அக்டோபரில் நடைபெற இருந்த பொதுத்தேர்தலை ஒத்திவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று பாகிஸ்தான் இராணுவ சட்ட நிர்வாகி ஜெனரல் ஸியாவுல்ஹக் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜூலை மாதம் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து ஆட்சியைக்கைப்பற்றிய இராணுவத் தளபதி அக்டோபர் மாதம் 8ம் திகதி பொதுத்தேர்தல் நடைபெறுமென அறிவித்திருந்தார்.

கடந்த ஜூலை மாதம் 5-ம் திகதி இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியபோது நாடு இருந்த நிலையில் 90 நாட்கள் மட்டுமே இராணுவச் சட்டத்தை அமுலில் வைத்திருப்பது என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் நாட்டில் குழப்பநிலை நீடித்துள்ளதால் இராணுவ ஆட்சியை மேலும் நீடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும் ஜெனரல் ஹக் தெரிவித்துள்ளார்.

இதே வேளையில் திருமதி பூட்டோ நாட்டில் வன்முறையைத் தூண்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

இதேவேளையில் திருமதி பூட்டோ நாட்டில் வன்முறையைத் தூண்டும் நடவடிக்கைகளை மேற் கொண்டுவருகிறார் என்று குற்றம்சாட்டிய இராணுவ பீடம் மேலும் இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம் என்று திருமதி பூட்டோவை எச்சரித்துள்ளது. (இ)

அரசு கவிழ்ந்தாலும்

# நாட்டில் குடிப்பழக்கத்தை ஒழிக்கத் தவறமாட்டோம்

## மொரார்ஜி சங்கற்பம்

புதுடில்லி, செப். 30 "ஜனதா அரசு கவிழ்ந்தால் என்ன, இருந்தால் என்ன மதுவிலக்கை இந்தியாவில் அமுல் செய்வது என்ற தனது தீர்மானத்திலிருந்து ஜனதா அரசு ஒரு போதும் வழுவாது. இதுவே ஜனதா அரசின் இறுதி முடிவு."

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் புதுடில்லியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

மதுவிலக்கு குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

காங்கிரஸ் கட்சி கவிழ்ந்தது போல் மதுவிலக்கை அமுலுக்குக் கொண்டுவந்தால் ஜனதா ஆட்சியும் கவிழ்ந்துவிடும் என்று பலர் எதிர்பார்க்கிறார்கள். ஆட்சி கவிழ்ந்துவிடும் என்று நாம் அஞ்சவில்லை. அரசு இருந்தாலும் சரி, போனாலும் சரி நாட்டில் குடிப்பழக்கம் ஒழிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் இறுதியானது.

அரச ஊழியர்கள் எம். பீக்கள் குடிப்பழக்கம் உள்ளவர்களாக இருந்தால் அவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இதற்குப் பொது மக்கள் தமது பூரண ஒத்துழைப்பை நல்கவேண்டும்." (இ)

## உத்தியோகபூர்வ அலுவல்களில் சஞ்சீவரெட்டி

புதுடில்லி, செப். 30 அமெரிக்காவில் நுரையீரல் சத்திரசிகிச்சை செய்து கொண்ட பின்னர் நாடு திரும்பிய இந்திய ஜனாதிபதி திரு. நீலம் சஞ்சீவரெட்டி நேற்று தமது உத்தியோகபூர்வ அலுவல்களைக் கவனித்தார்.

அவர் இப்போது பூரண சுகத்துடன் இருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

## ஜி.ஏ. உத்தரவு

யாழ்ப்பாணம், சனி நெடுந்தீவில் தொடர்ந்து குடிநீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.அரசாங்க அதிபர் திரு. டபிள்யூ. ஏ. எல். விஜயபால உத்தரவிட்டுள்ளார்.

மூன்று தினங்களாக நெடுந்தீவில் குடிநீர் விநியோகம் நடைபெறவில்லையென அவ்வூர் மக்கள் யாழ் எம் பி. திரு. யோகேஸ்வரனிடம் முறையிட்டிருந்தனர்.

அவர் இதனை அரசாங்க அதிபரின் கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தார்.

(செ உ)



# தமிழ் மொழிக்கு தேசிய அந்தஸ்து; வேறு எதுவும் திருப்தி தரமாட்டாது"

## திரு. வி. பொன்னம்பலம் கூறுகிறார்

பண்டத்தரிப்பு, செவ்.
"இந்நாட்டின் தேசிய மொழிகளில் ஒன்றாக தமிழ் மொழி அரசியலமைப்பில் இடம்பெறுதவரை தமிழ் மக்களை எந்த ஒரு சக்தியாலும் திருப்திப் படுத்த முடியாது" என்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகர் திரு.வி. பொன்னம்பலம் அடவெட்டி ஸ்ரார் விளையாட்டுக் கழக ஆண்டு நிறைவு விழாவில் பேசுகையில் கூறினார்.

கழகத்தலைவர் திரு. கே. செல்வத்துரை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு.வி.பி.மேலும் பேசுகையில் கூறியதாவது:

"சமீபத்தில் நடைபெற்ற இனவிரோத, வகுப்புவாத வன்செயல்கள் இனிமேலாவது நாட்டில் ஏற்படாதவாறு தென்னிலங்கையில் உள்ள இளைஞர்கள் வழிநடத்தப்பட வேண்டும்.

### பிரதமரின் பேச்சு

பிரதமரின் சமீபத்தைய பேச்சுகள் தமிழ் மக்களுக்கு நம்பிக்கையூட்டுவதுபோல அமைந்திருந்தாலும் நடைமுறையில் தமிழ்ப் பேசும் மக்கள் பரம்பரையாக வாழும் தாயகம் வரையறுக்கப்பட்டு தமிழ் மொழி அப்பிரதேச ஆட்சி மொழியாகவும், தமிழ் மொழி இந்நாட்டின் தேசிய மொழிகளில் ஒன்றாகவும் அரசியலமைப்பில் இடம்பெறுதவரை தமிழ் மக்களை எந்த ஒரு சக்தியாலும் திருப்திப்படுத்த முடியாது.

நாட்டில் ஸ்திரமான சூழ்நிலை உருவாகி, வாழ்வு பறிபோய்ப்பலவிதங்களிலும் விரக்தியடைந்திருக்கும் தமிழ் மக்கள் தம் எதிர்கால வாழ்வு பற்றி மனத்தெம்பு கொள்வதற்கு வெறும் பேச்சுகள் மட்டும் போதாது.

### நாட்டில் அமைதி ஏற்பட...

செயல்வடிவில் புனரமைப்பு வேலைகளை மேற்கொண்டு சட்டரீதியில் அமைந்த மொழிவழிப் பிரதேச சுயாட்சியும் சட்டபூர்வ அந்தஸ்தும் கிடைக்காதவரை நாட்டில் அமைதியும் நிம்மதியும் ஏற்பட்டுவிடும்என எவரும் எதிர்பார்க்கமுடியாது.

### நம் கடமை

சொல்லொணாத் துன்பங்களுக்கு ஆளாகி உயிர்வாழ வேண்டும் என்ற ஒரே ஆவலினால் எமது பகுதியை நாடிவந்துள்ள அகதிகளுக்கு உதவுவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

### நாம் உண்டு உடுத்து உறங்குகிறோம் ஆனால்...

நாமெல்லாம் மூன்று வேளைகளும் உண்டு உடுத்து உறங்கும் இவ்வேளையில் எம்முடன் பிறந்த தமிழ்மக்கள் அகதிகள் முகாம்களில் ஆயிரக்கணக்கில் போதிய உணவு உடை படுக்கை வசதிகளற்று பரிதவிப்பதை எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டுள்ளோம்.

அரசாங்கம் அனுதாபத்தோடு இவர்களை ஆதரிக்கும் என்று கருதாமல் தமிழ் இளைஞர்கள் அகதிகளுக்குத் தொண்டாற்றி சேவை செய்ய வேண்டும்

### மூ.திருநாவுக்கரசு உரை

தமிழர் விடுதலைக்கூட்டணி பிரமுகரும் சட்டத்தரணியுமான திரு. மூ திருநாவுக்கரசு உரையாற்றுகையில் தமிழ்மக்களுக்கு இதுவரை இல்லாத பற்றும் பாசமும் இன்று தம் சொந்தமண் மீது வந்துள்ளது.

எம் சொந்த மண்ணை கிராமம் கிராமமாகச் சீர் செய்து மறுமலர்ச்சி காண வேண்டும் என்றார்.

கலைநிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெற்றன. (உ)

## ஸ்கந்தாவில் 'தியாகர்'

யாழ்.குடாநாட்டில் தலைசிறந்த பல கல்விமான்களை உருவாக்கிய உவகையால்தானோ என்னவோ 'ஸ்கந்தா' மக்கள் மனதில் உயர்ந்து நிற்கிறது. கந்தரோடை என்னும் கிராமத்தில் உள்ள ஸ்கந்தவரோதயக் கல்லூரி நகரங்களில்உள்ள எந்த ஒரு கல்லூரியினது கல்வித்திரத்திலும் குறைந்ததல்ல என்பது பல ஆண்டுகட்கு முன்பே நிரூபிக்கப்பட்ட உண்மையாகும்.

வெள்ளைக்காரரின் விளையாட்டுக்களான 'கிரிக்கட்' உதைபந்தாட்டம் என்பன நகர்ப்புறகல்லூரிகட்கே தனிச்சொந்தென மதிக்கப்பட்ட ஒரு காலத்தில், கிராமப்புற மாணவர்களாலும் அவ்விளையாட்டுக்களை திறமையுடன் விளையாட முடியுமென ஒருவர் கூறியபோது பலர் அவரது கூற்றினை எள்ளிநகையாடி ஏளனம் செய்தனர். மக்களின் ஏளனத்தைப் பொருட்படுத்தாது அவர் செயற்பட்டமையால் கடந்தபல ஆண்டுகளாக யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாமல் முழு இலங்கையிலும் உதைபந்தாட்டம் என்றால் 'ஸ்கந்தா' என்னும்பெயர் நிலை பெற்று விட்டது. ஆம்! கிராமப்புற கல்லூரியான ஸ்கந்தா பல ஆண்டுகள் உதைபந்தாட்ட சம்பியன்களாகதெரிவு செய்யப்பட்டது. 'கிரிக்கெட்' ஆட்டத்திலும் சிறந்த ஸ்தானத்தைப்பெற்றுள்ளது. தனது ஆர்வத்துக்கும் இலட்சியத்துக்கும் கிடைத்த வெற்றியால் அவர் புன்னகைக்கிறார். சிறந்த ஓர் ஆசிரியரை அதிபராக்கிய பெருமையில் 'ஸ்கந்தா' பூரிப்படைகிறது!! விளையாட்டுத்துறையில் மாத்திரமன்றி உயர் வகுப்புக்களுக்கு குடியியல், ஆங்கிலம், அரசியல் முதலியவற்றினை கற்பித்து கல்லூரியின் புகழை உயர்த்திய முன்னாள் ஆசிரியரும்—இந்நாள் அதிபருமான திரு.சி. தியாகராசா அவர்களின் சாதனையைப் பாராட்டி ஞாயிற்றுக்கிழமை கல்லூரி பெற்றோர் ஆசிரியர்சங்கம் சிறப்பான விருந்துபசாரம் ஒன்றினை ஸ்கந்தாவில்நடத்துகிறது.

அதிபர் திரு.சி.தியகராசா ஸ்கந்தாவில் ஆசிரியராக பணியாற்றியபின் பதவி உயர்வு பெற்று மாவட்ட கல்விஅதிகாரியாக சேவைபுரிந்து மீண்டும் ஸ்கந்தாவுக்கே அதிபராக நியமனம் செய்யப்பட்டதை பழையமாணவர் சங்கமும், பெற்றோர் ஆசிரிய சங்கமும் மிகுந்த கௌரவமாக எண்ணி வரவேற்கின்றன.

புத்தகங்களை மறந்தாலும், பிரம்பு ஒன்றை மறக்காமல் கையோடு வகுப்புக்குக்கொண்டு வரும் ஆசிரியர்கள் மத்தியில் பிரம்பு இன்றி மாணவர்களுக்குச் சரியான வழிகாட்டியாக 'தியாகர்' ஸ்கந்தாவுக்கு அதிபராக நியமிக்கப்பட்டது ஸ்கந்தவரோதய கல்லூரியின் எதிர்கால மேம்பாட்டினை உறுதிப்படுத்துகிறது.

மாணவ சமுதாயம் அவர் மீது கொண்டுள்ள நம்பிக்கைகளை அதிபர் திரு. சி. தியாகராசா காப்பாற்றுவாராக!

சபா. புஷ்பநாதன்

## ஆசிரியருக்குக் கடிதம்:

### மதகின் அவலநிலை

ஆரியகுளம் சந்தியில் உள்ள மதகு உடைந்து பலநாட்களாகியும் திருத்தப்படாதநிலையில் இருப்பதினால் பாதசாரிகள் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

இவ்வுடைந்த மதகின்மேல் போடப்பட்டுள்ள கார் டயரின் மேல் மிதிப்பவர்கள் அடிக்கடி விழுந்து எழும்பும் காட்சியைக் காணக்கூடியதாக உள்ளது.

இது யாழ்நகரின் ஒரு பிரதான சந்தியாகவும் ஏராளமான பாடசாலைச் சிறுவர் சிறுமியர் நடமாடும் இடமாகவும் இருப்பதை மனதிற்கொண்டு உரிய அதிகாரிகள் பொதுமக்களின் கஷ்டத்தை போக்க நடவடிக்கை எடுப்பார்களா?

ப. ஹரன்

## இளவாலை படுகொலை: கார்ச் சாரதிக்கும் பிணை

மாவிட்டபுரம், வெள்ளி
இளவாலை துப்பாக்கிச் சூட்டுக் கொலைச்சம்பவம் குறித்து றிமான்டில் வைக்கப்பட்டிருந்த கார்ச் சாரதி 1000 ரூபா சரீரப் பிணையில் அனுமதிக்கப்பட்டார்.

துப்பாக்கி முனையில் பலாலியில் வைத்துக் காரொன்றைக் கடத்திச் சென்ற கோஷ்டியொன்று அக்காரில் இளவாலைக்குச் சென்று இளவாலையைச் சேர்ந்த இம்மானுவேல் என்ற இளைஞனை துப்பாக்கியால் சுட்டுக்கொன்றது தொடர்பாக எஸ். சேவியர் என்னும்இளைஞரும், காரொன்றுடன் அக்கார்ச் சாரதியான எஸ். சிவபாதசுந்தரம் என்பவரும் சங்கானைப் பொலிசாரால் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிபதி முன் ஆஜர்செய்யப்பட்ட சமயம் மேற்படி இளைஞரை 1000 ரூபா பிணையிலும் காரை 10,000 ரூபா பிணையிலும் எடுத்துச் செல்ல அனுமதித்த நீதிபதி, கார்ச் சாரதியை மட்டும் தொடர்ந்து றிமாண்டில் வைக்குமாறு ஏற்கனவே உத்தரவிட்டிருந்தார்.

இச் சாரதி நேற்று முன்தினம் மீண்டும் ஆஜர் செய்யப்பட்ட சமயம் அவரது சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் கோரியதற்கிணங்க அவரை 1000 ரூபா சரீரப் பிணையில் செல்ல நீதிபதி அனுமதித்தார்.

மேல் விசாரணை அக்டோபர் மாதம் 19-ம் திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது. [உ]

## கொடித்தினம்

வேலணை, வெள்ளி
அக்டோபர் 4ம் திகதி கயரோக கொடித்தினத்தை நடாத்த வேலணை கயரோக தடுப்புச் சங்கம் ஏற்பாடுசெய்துள்ளது. இக்கொடித்தினத்தைச் சிறந்த முறையில் நடாத்துவது பற்றிய ஆலோசனைக்கூட்டமொன்று வேலணை உதவி அரசாங்க அதிபரும் மேற்படி சங்கத் தலைவருமான திரு.மு. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

இவ் வாலோசனைக்கூட்டத்தில் வடபகுதி கயரோகத்தடுப்புச் சங்கத்தின் பிரதிநிதி திரு. என். நடராசன், வேலணை,சுகாதாரப் பரிசோதகர் திரு. கே. சிவலிங்கம், பொது மருத்துவமாதர்கள், உறுப்பினர்கள் முதலியோர் கலந்துகொண்டனர். (உ)

## நிறைவு

வேலணை, வெள்ளி
வேலணை சாட்டியில் கோவில் கொண்ட புனித சிந்தாத்திரை மாதா வருடாந்த புரட்டாசி மாத உற்சவம் திருச்சொரூப பவனியுடன் நிறைவெய்தியது.

இவ்வருட உற்சவத்தில் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான யாத்திரிகர்கள் கலந்துகொண்டனர்.

இவ்வுற்சவத்தை முன்னிட்டு விசேட பஸ் சேவையும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (உ)

## துப்பாக்கி அபகரிப்பு:

### ஒருவருக்கு றிமாண்ட்; இருவருக்கு பிணை

மாவிட்டபுரம், வெள்ளி
கலவரநேரத்தின்போது துப்பாக்கி வைத்திருந்த வீடுகளுக்குள் புகுந்து வீட்டுக்காரர்களைப் பயமுறுத்தி துப்பாக்கிகளை அபகரித்துச் சென்ற கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகிக்கப்பட்டு கைதான மூன்றுவாலிபர்களில் ஒருவர் மட்டும் அடையாளம் காணப்பட்டார். மற்றவர்கள் அடையாளம் காணப்படவில்லை.

கலவரநேரத்தின்போது உரும்பராய்ப்பகுதியைச் சேர்ந்த மூன்று வீடுகளுக்குள் அத்துமீறிப் பிரவேசித்து துப்பாக்கி முனையில் அவ்வீட்டுக்காரர்களது துப்பாக்கிகளை அபகரித்தது தொடர்பாக உரும்பராயைச் சேர்ந்த எஸ். வசந்தகுமார், இரவீந்திரன், முத்துலிங்கம் ஆகிய மூவரை சுன்னாகம் பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்து மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்த சமயம் அடையாள அணிவகுப்புக்கு உத்தரவிடப்பட்டது.

மல்லாகம் பதில்நீதிபதி திரு. ஆர். ஜே.செல்வரத்தினம்முன்னிலையில் நடந்த இந்த அடையாள அணிவகுப்பில்துப்பாக்கி பறிகொடுத்தவர்களில் ஒருவர் முதலாவது சந்தேகநபரான வசந்தகுமாரை மட்டும் அடையாளம் காட்டினார். மற்ற இருவரையும் எவரும் அடையாளம் காணவில்லை.

இதையடுத்து அடையாளம் காணப்பட்ட சந்தேகநபரை தொடர்ந்து றிமாண்டில்வைக்குமாறும், மற்றவர்களை தலா 1000 ரூபா பிணையில் செல்லுமாறும் நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

2ம், 3ம் சந்தேக நபர்கள் சார்பில்சட்டத்தரணி ரி. தம்பிரத்தினம் ஆஜராகியிருந்தார். சுன்னாகம் பொலிஸ்இன்ஸ்பெக்டர் ஜனூப் காதர் பொலிஸ் தரப்பில் ஆஜரானார். (உ)

## "தொழில்துறைகல்வியினால் மாணவரின் எதிர்காலம் சிறக்கும்"

யாழ்ப்பாணம், சனி
'முன்னைய அரசினரால் கொண்டுவரப்பட்ட பாடத்திட்டத்தில், தொழிற்துறைக் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, மாணவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கும் பொருட்டு போதனைகள் நடைபெறுவது போற்றத்தக்கது. இத்துறைகளில் தும்புத்தொழில் எமது நாட்டின் மூலப்பொருள்களைக் கொண்டு நடைபெறும் தொழில்வளமாகும். இத்தொழில் துறையில் மாணவர்கள் அதிக ஆர்வம் காட்டினால் நல்ல எதிர்காலத்தை உருவாக்க முடியும்.'

இவ்வாறு கொழும்புத்துறை ஆசிரிய பயிற்சிக் கல்லூரி அதிபர் திரு. கே.ஜெயராஜா 'தும்புத்தொழில்' என்னும் நூலை வெளியிட்டுவைத்து தலைமையுரை நிகழ்த்துகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

தொழிற்கல்விக்கு போதிய நூல்கள் இல்லாத காலத்தில் தும்புத் தொழிலுக்கு விசேடமாக ஆசிரியர் திரு. எஸ். எக்ஸ். துரைராசாவின் அரிய முயற்சியினால் உருவாக்கப்பட்ட நூலொன்று வெளியிடப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது ஆசிரியரின் இந்நூல் இன்றைய மாணவர்களுக்கு பெரும் வரப்பிரசாதமாகும்.

இவ்விழா, கொழும்புத்துறை றோ. க. பாடசாலையில் நடைபெற்றது. விழாவில் பாடசாலை அதிபர் திரு. அருளப்பு, திரு. மார்ட்டின் ஆகியோர் உட்பட பலர் ஆசிரியர் துரைராஜாவின் முயற்சியைப் பாராட்டினர்

முதற் பிரதியை அதிபர் திரு. ஜெயராசா வாங்கினார். (கெ-இ)

## தெய்வ மலருக்கு தங்கப் பதக்கம்

எழுதுமட்டுவாள், வெள்ளி
எழுதுமட்டுவாள் ஒட்டுவெளி பராசக்தி கலைக்கழகத்தினர் தமது மூன்றாவது ஆண்டு விழாவையொட்டி நடாத்திய நாடகப் போட்டியில், புத்தூர் 'பம்பல்' நாடக மன்றத்தின் 'தெய்வமலர்' என்ற நாடகம் 1ம் இடத்தையும், கோண்டாவில் ஸ்ரீ கிருஷ்ணாலய நாடக மன்றத்தின் 'தியாகச் சுடர்' 2ம் இடத்தையும், பருத்தித்துறை முத்தமிழ் கலாலயத்தின் 'திருப்பம்' 3ம் இடத்தையும் பெற்றன. 1ம் இடத்திற்கு தங்கப்பதக்கமும் 2ம் இடத்திற்கு வெள்ளிப்பதக்கமும் 3ம் இடத்திற்கு வெள்ளி விருதுகளும் பரிசாகக் கிடைத்துள்ளன. (இ)

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 6 45 10-00
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
**பூம்புகார்**

**புலோலி சினிமாஸ்**
(பருத்தித்துறை)
தினசரி பி. ப. 2-30, 7-00
**வல்லவன் ஒருவன்**

**RIO** Daily 10-30, a.m. 4-45, 7-15 p. m.
(Jaffna)
Grand Release From Today
PETER CUSHING - BERNARD LEE
in
**FURY AT SMUGGLER'S BAY**
(கடத்தல்காரர் பக்கம் குமுறல்)
Eastman Colour Panascope

**மனோஹரா** எம். ஜி. ஆர். - பத்மா - நாகேஷ்
(யாழ்ப்பாணம்) அறிமுகம் பவானி
தினசரி மு.ப. 10-30 பி.ப. 2-30 6-30, 9-45
நடித்த
**உழைக்கும் கரங்கள்**
(ஈஸ்ட்மன் கலர்)

**சாந்தி** தினசரி 10-30, 2-30, 6-30 9-45
யாழ். நகர் ஃ சிவாஜி (மூன்று வேடங்கள்)
போன்: 7642 ஃ ஜெயலலிதா
**தெய்வ மகன்** (புதியபிரதி)
1-10-77 காலை 10-30 மட்டும் நிதியுதவி காட்சி

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் ஜெயபிரபா அசோகன்
**துணிவே துணை**

**லிடோ** தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
போன்: 7693
(யாழ். நகர்)
எஸ். எஸ். ஆர். — விஜயகுமாரி
**பணம் பந்தியிலே**
அடுத்த வெளியீடு **நீதிக்கு தலை வணங்கு**

**Regal** (Jaffna)
Daily at 4-45 7-00 & 9-30 p. m only
**"SHARK"**
(Action Film color)

**வின்ஸர்** தினசரி 10-30, 2-30, 6-00, 9-30
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா,
(யாழ்ப்பாணம்) கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
**சத்யம்**
(ஈஸ்ட்மன் கலர்)

**ராஜா** தினசரி 10-30, 2-30, 6-00 9-35
போன்: 7180
(யாழ்நகர்) எம். ஜி. ஆர்—ராஜசுலோசனா
சந்திரபாபு நடித்த
**குலேபகாவலி** [புதியபிரதி]

**ஸ்ரீதர்** தினசரி காலை 10-30, 2-00, மாலை 5-00,
(யாழ்ப்பாணம்) சனி, ஞாயிறு 10-00, 1-00, 4-00, 6-30
சிவகுமார்-சுஜாதா-ஸ்ரீகாந்த்
நடித்த
**அன்னக்கிளி**

**ராணி** ஜெய்சங்கர் - பத்மினி - லக்ஷ்மி
முத்துராமன் - நாகேஷ் - சச்சு
(யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30 9-30
தேவரின்
**பெண் தெய்வம்**

### கனடாவில் நடந்தது:

# மந்திரி தேவநாயகத்துடன் தமிழ் இளைஞர் கருத்துமோதல்

[அண்மையில் நீதியமைச்சர் திரு. கே. டபிள்யு. தேவநாயகம் வெளிநாடு சென்றிருந்தாரல்லவா; அப்பொழுது கனடாவில் அவருக்கு ஒரு வரவேற்பளிக்கப்பட்டது. அக் கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழ் இளைஞர்கள் அமைச்சரிடம் பல கேள்விகளை எழுப்பி விளக்கம் கேட்டார்கள். இதுபற்றிய விபரம் இப்பொழுது கிடைத்துள்ளது. அதனை இங்கு தருகின்றோம்]

ஆகஸ்ட் 28ந் திகதி ஹோட்டல் ஹொலிடே இன்னில் மாலை 3 மணிக்கு பார்ஸலோனா மண்டபத்தில் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களால் தேவநாயகத்திற்கு வரவேற்புக் கூட்டம் ஒன்றை ஒழுங்கு செய்திருந்தனர். மூன்று மணிக்கு ஆரம்பமாகிய இக்கூட்டத்தில் டொராண்டோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் மத்யூஸ் திரு. தேவநாயகத்தை அறிமுகம் செய்துவைத்து, இலங்கையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இனக்கலவரத்தைப் பற்றி விளக்குமாறு வேண்டினார். தேவநாயகம் இனக்கலவரம்பற்றி விளக்கிய பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி தமிழர்களின் பிரச்னைகளைத் தீர்த்து வைக்கும் என்றும் கூறினார். தேவநாயகத்தை கேள்விக்கணைகளால் துளைத்தெடுப்பதற்கென வந்திருந்த ஈழத்தமிழர்களின் சார்பில் ஒரு தமிழ் இளைஞர் எழுந்து ஐக்கிய தேசியக் கட்சியின் கடந்தகால வரலாற்றை எடுத்துக் கூறி, ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஆராய்ந்து 'இக்கட்சி தமிழர்கட்கு உரிமை கொடுக்கும் என நாம் நம்பவில்லை' எமது சுய நிர்ணய உரிமையையே நாம் வேண்டுகின்றோம் எனக் கூறினார்.

இதற்குப் பதிலளித்த தேவநாயகம் பண்டா-செல்வா ஒப்பந்தத்தில் உள்ள 'பிரதேச சபை' அமைப்பை ஜே. ஆர். விரும்பவில்லையெனவும், யு. என். பி. என்றுமே 'பிரதேச சபை' அமைப்பை எதிர்க்குமெனவும் கூறினார். அப்போது ஒரு தமிழ் இளைஞன் எழுந்து 'அப்படியானால் டட்லி ஏன் 'மாவட்டசபை' அமைப்பை 1965ல் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டார்? என வினவியபோது திரு. தேவநாயகத்தினால் பதில் அளிக்க முடியவில்லை. பிறிதொரு கேள்விக்குப் பதிலளிக்கும்போது 'தமிழர்கள் இரண்டு விடயங்களை மாற்றமுடியாது. ஒன்று சிங்களம் மட்டும் சட்டம், இரண்டாவது தமிழர்கள் என்றுமே சமவுரிமை பெறமுடியாது' என்றார்.

இவ்வாறு அவர் கூறிக்கொண்டிருக்கும்போது ஆத்திரப்பட்டு எழுந்த தமிழர்கள் அப்படியானால் 'சுதந்திரத் தமிழ்ஈழம்தான் ஒரேயொரு வழியென்பதை மறைமுகமாக ஏற்றுக்கொள்கிறீர்களா? எனக் குரல் எழுப்பினர். திரு. தேவநாயகம் எழுந்து 'நாங்கள் தமிழ் ஈழம் பெறமுடியாது. ஏனெனில் இலங்கையின் இரு பெரும் கட்சிகளும் தமிழர்கட்கு சுதந்திரம் கொடுப்பதற்கு ஒப்புக்கொள்ளமாட்டார்' எனக் கூறினார். கொதித்தெழுந்த தமிழர்கள் 'சுதந்திரம் என்பது யாசித்துபெறுவதில்லை அதை எப்படிப் பெறவேண்டும் என எமக்குத் தெரியும்'' என ஒரே குரலிற் கூறினர்.

தேவநாயகம் இதற்குப் பதிலளித்து ''சுதந்திரத் தமிழ் நாட்டிற்கு நீங்கள் வேண்டுமானால் போராடுங்கள் ஆனால் கிழக்கு மாகாணத் தமிழ்மக்கள் இதற்கு ஆதரவளிக்க மாட்டார்கள்'' எனக் கூறினார். உடனே ஒரு கிழக்கு மாகாணத் தமிழர் எழுந்து. ''மயிரிழையில் வெற்றிபெற்ற உங்களுக்குக் கிழக்கு மாகாணத்தைப் பிரதிபலிக்கும் ஏகபோக உரிமையை யார் தந்தது? இனக் கலவரத்தில் தமிழர்களை அடிக்கும்போது ''நீ கிழக்கு மாகாணத்தவனா? வடக்கு மாகாணத்தவனா? மலையகத்தவனா? எனக் கேட்டா அடித்தார்கள். தமிழர்களைப் பிரதேச வேறுபாட்டால் பிரிக்கமுடியாது'' எனப் பலத்த கைதட்டல்களிடையே கூறினார்

ஒரு கட்டத்தில் ''யாழ்ப்பாணம், மட்டுநகர் வந்த அகதிகள்'' என்ற வார்த்தைகளை திரு. தேவநாயகம் உபயோகித்தபோது தமிழ் இளைஞர் ஒருவர் எழுந்து ''சொந்த நாட்டில் யாரும் அகதிகளாகக் கணிக்கப்படமுடியாது.'' அகதிகள் என்ற வார்த்தையை உபயோகித்தபோது நீங்கள் ''இரு தேசக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டீர்கள் தமிழ்த் தேசமும், ஸ்ரீலங்காவும் வெவ்வேறு தேசங்கள் என ஏற்றுக்கொண்டதற்கு நன்றி'' எனக் கூறினார்

இதைத் தொடர்ந்து வாக்குவாதமும், பெருங் கூச்சலும், குழப்பமும் ஏற்பட்டது. இதற்கு மத்தியில் ஒரு தமிழர் எழுந்து, தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளைப் பற்றிய அறிக்கை ஒன்றை வாசித்துவிட்டு, ''ஏகாதிபத்திய அமைச்சர் ஒருவருடன் தொடர்ந்து வாதிக்க, நான் தயாராக இல்லை. ஆகவே நான் வெளிநடப்புச் செய்கிறேன்'' எனக் கூறிவிட்டு வெளிநடப்புச் செய்தார். உடனே மற்றைய தமிழர்களும் கோஷங்களை எழுப்பிக்கொண்டு நிரைநிரையாக வெளிநடப்புச் செய்தனர்.

திரு. தேவநாயகம் திகைத்துப்போய் நின்றார்.

இவர்கள் அனைவரும் இதே தினத்தில் டொரண்டோ சமூக மண்டபத்தில் மாலை 5-30க்கு நடைபெற்ற தமிழ் ஈழ இயக்கக் கூட்டத்தில் கலந்துகொண்டனர் தமிழர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தபோது ஒருசிலர் மாத்திரமே மண்டபத்தில் இருந்தனர்.

## அண்ணாவை—

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தத்துவஞானியைப்போல, கவிஞனைப்போல அத்தனை தரத்து மக்களும் அவர் தம்துறை சார்ந்த கண்ணோட்டத்தில் ஒப்பற்ற ஒருஇலக்காகத்திகழ்ந்தார்.

ஆனாலும் ஒரு வருந்தத்தக்க வெட்கித் தலைகுனியத்தக்க நிலை நமக்கு இன்று ஏற்பட்டுள்ளது என்னவோ உண்மைதான் என்பதை எண்ணி கண்ணீர் வடிக்காமல் இருக்கமுடியாது.

அண்ணா அவர்களின் பெயர் இன்று வியாபாரியின் பார்வையில் பட்டுவிட்டது. அந்த வியாபாரி மக்கள் தலைவரின் பெயரை-சமூகத்தில் தன்னிகரற்றுத் திகழ்ந்த அந்த மாமேதையை சந்தைப்பொருளாக்கி காசாக்க ஆதாயம் தேடத்துவங்கி வியாபாரம் நடாத்தும் காட்சியைக்காண்கிறோம்.

அந்த அரசியல் வியாபாரி அண்ணாவைச் சந்தைச் சரக்காக்கி துவங்கிய கடைதான் இன்று ஆளும்கட்சியான அ. இ. அ. தி. மு. க.; அந்தவியாபாரி எம். ஜி. ஆர். தான்.''

(கெ-உ)

## பதவிக்காக...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டேப்பு, டேப்பு இருக்கிறதென்கிறார்.

மனோகரன் தன்னிடமிருக்கும் டேப்புக்களையும் கொண்டு வரட்டும் நானும் என்னிடமிருக்கும்டேப்பையும் கொண்டு வருகிறேன். இரண்டையும் சட்டசபையில் போட்டுப் பார்ப்போம் சரி அந்த அளவிற்கு வேண்டாம், சபாநாயகர் அறையில் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் உட்காரவைத்துக்கொண்டு போட்டுப் பார்ப்போமா?'' என கலைஞர் கேட்டார். (கெ-உ)

### அகதிகளின் பிள்ளைகள் நிலை:

# குறைதீர்க்க 'அமிரி'டம் வேண்டுகோள்

மாவிட்டபுரம், வெள்ளி வடபகுதிக்கு அகதிகளாக வந்து தங்கியுள்ளவர்களது பிள்ளைகளைத் தமது பாடசாலைகளில் அனுமதித்துக் கல்வி போதிப்பதற்குக் கட்டிட வசதிகள் போதுமானதாக இல்லாதிருப்பதால் கட்டிடங்கள் அமைக்க நிதியுதவி பெற்றுத் தருமாறு காங்கேசன்துறைப் பகுதியின் பல்வேறு பாடசாலைகளின் அதிபர்கள் காங்கேசன் துறை எம். பி. திரு. அமிர்தலிங்கத்திடம் கோரியுள்ளனர்.

1977ம் ஆண்டின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகள் பற்றி ஆராயத் தெல்லிப்பழை பலநோக்கக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் காங்கேசன் துறை எம் பி திரு அமிர்தலிங்கம் ஒழுங்குசெய்திருந்த கூட்டத்திலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் பங்குபற்றிய இப்பகுதிப் பாடசாலை அதிபர்கள், பெற்றோர்கள், பொதுமக்கள் ஆகியோர் மேற்படி நிதியில் நிதியுதவிபெற்று மேற்கொண்ட வேலைகள் பற்றியும், குறையாக உள்ள வேலைகள் பற்றியும், அவற்றுக்கு வேண்டிய நிதியுதவி பற்றியும் எடுத்துக் கூறினர்.

அத்துடன் அகதிகளாக வந்துள்ளவர்களது பிள்ளைகளைத் தமது பாடசாலைகளில் அனுமதித்துக் கல்வி போதிக்க வகுப்பறை வசதிகள் இல்லாதிருப்பதால் கட்டிடங்கள் அமைக்க நிதி பெற்றுத்தருமாறு இப்பகுதிப் பல பாடசாலைகளின் அதிபர்கள் திரு. அமிர்தலிங்கத்திடம் கோரினர்.

இவை குறித்து உடன் நடவடிக்கை எடுத்து நிதி பெற்றுத்தர ஆவன செய்வதாக அவர் உறுதியளித்தார். (உ)

### மணிவாக்கு

ஆசையடங்காமல் கோப மடங்காது. வீட்டிலே மணமிருக்குந்தனையும்வாசலிலே நாய்க்குரைச்சல் ஒயாது.

—யாக்கோமே கொன்சால் வெஸ்.

ஈழநாடு
The Eelanaadu

# தாமதம் வேண்டாம்

அரசியல் அமைப்புக்குத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இத்திருத்தப் பற்றிய மசோதா மீது இம்மாதம் நான்காந் தேதி விவாதம் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

ஆறுந் தேதி திருத்த மசோதா மீதான விவாதம் முடிவடைந்து வாக்கெடுப்பு நடைபெறும்.

அரசாங்கத்திற்கு மிகப் பெரும்பான்மைப் பலம் இருப்பதால் அரசியல் அமைப்புக்குக் கொண்டுவரப்படும் திருத்தம் நிறைவேற்றப்படும் என்பது நிச்சயம்.

தமிழர் விடுதலைக் கூட்டணி இதுவரை அரசியல் அமைப்புக்குக் கொண்டுவந்துள்ள திருத்தத்தை ஆதரிப்பதா இல்லையா என்பது பற்றி ஒரு முடிவும் செய்யவில்லை.

புதிய குடியரசு அமைப்பைத் தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்றுக்கொள்ளாமல் அதைப் பகிஷ்கரித்தால் அதற்குக் கொண்டுவரப்படும் திருத்தம் பற்றி அக்கறை கொள்ளவேண்டிய அவசியமில்லையென்றும் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

புதிய அரசியல் அமைப்பைத் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதும் அதைப் பகிஷ்கரித்தார்கள் என்பதும் உண்மையே. புதிய அரசியல் அமைப்பைத் தமிழ்மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை அமரர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தமது எம். பி. பதவியை ராஜினமாச் செய்து மீண்டும் இடைத்தேர்தலில் போட்டியிட்டு அமோக வெற்றியீட்டி நிருபித்ததும் உண்மையே.

ஆனாலும் புதிய அரசியல் அமைப்பின் கீழ் நடந்த பொதுத் தேர்தலில்தான் தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் போட்டியிட்டு வெற்றியீட்டி, அதே அரசியல் அமைப்புக்கு விசுவாசம் தெரிவித்துப் பேரவையில் இன்றும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்பதும் உண்மையாகும்.

இதற்குத் தமிழர் கூட்டணியினர் வேறு காரணங்களைக் கூறலாம்.

என்றாலும் புதிய அரசியலமைப்புக்குத் திருத்தம் கொண்டுவரப்படும் போது அதிலும் தமிழ் மக்களுக்குச் சாதகமாகத் திருத்தம் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது தமிழர் விடுதலைக் கூட்டணியினரான பேரவை உறுப்பினர்களின் கடமையாகும்.

'ஈழநாடு' பத்திரிகையில் நேற்று திரு சந்திரன் என்ற வாசக நேயர் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டது போன்று ஜனதிபதி தெரிவு பற்றிய அரசியல் அமைப்புத் திருத்தத்துக்கு ஒரு திருத்தமாக உபஜனதிபதியொருவர் தெரிவு செய்யப்படவேண்டுமென்றும் உபஜனதிபதி ஒரு தமிழராக அல்லது முஸ்லிமாக மாறி மாறிப் பதவி வகிக்கக் கூடியதாகம் திருத்தம் கொண்டுவரலாம்.

இதன்மூலம் சிறுபான்மையினருக்கு நியாயம் வழங்குவதே தமது இலட்சியம் என்று கூறும் பெரும்பான்மைக் கட்சிகளின் உண்மையான மனோநிலையையும் அறிந்து கொள்ளவும் எடுத்துக்காட்டவும் வாய்ப்பேற்படும்.

மாவட்ட மந்திரிகள் நியமனத்திலும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மாவட்டங்களை விருத்தி செய்துகொள்ளவேண்டியது அவசியமாகும்,

இனியும் இது விஷயங்களில் தமிழர் கூட்டணியினர் காலதாமதமின்றி முடிவுசெய்ய வேண்டியதும் இது பற்றிப் பொதுமக்களுக்கு அறிவிக்க வேண்டியதும் அவர்களது கடமையும் பொறுப்புமாகும்.

# நல்லெண்ண தூதுகோஷ்டி அகதிகளை சந்தித்தது

யாழ்ப்பாணம், சனி

தென்னிலங்கையிலிருந்து வந்த நல்லெண்ண தூதுக்கோஷ்டியொன்று யாழ்ப்பாணத்திலுள்ள அகதிகள் முகாமிற்குச் சென்று அகதிகளை நேரில் சந்தித்து, மீண்டும் சொந்த இடத்திற்குவருமாறு, அழைப்பு விடுத்தபோது 'நிலைமை சீரானபின் வருவது பற்றி ஆலோசிப்போம்' என்றுர்கள்

ஸ்ரீலங்கா ஐக்கிய கிராம சேவையாளர் சங்கத்தைச் சேர்ந்த திரு. ஜோதிபாலா (இரத்தினபுரி), திரு. குணவர்த்தன (பொலனறுவா) ஆகியோர் யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

இவர்களை வடபகுதி கிராம சேவகர்களான திரு. தி. சிவபாதசுந்தரம், எம் டொமினிக், வி. சந்தவேள் ஆகியோர் அகதிகள் முகாமிற்கு அழைத்துச் சென்றிருந்தனர்.

இக்கோஷ்டியினர் அகதிகளுக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்கள்பற்றி நேரில் கேட்டறிந்தனர்.

பழைய மார்க்கட், மற்றும் யாழ்ப்பாணத்தில் சேதமடைந்த கட்டடங்களையும் இவர்கள் பார்வையிட்டனர்.

ஸ்ரீலங்கா ஐக்கிய கிராம சேவையாளர் சங்க யாழ். கிளையினரின் விருந்தினராக இரு தினங்கள் இவர்கள் தங்கியிருந்தனர்.

### யாழ். எம். பியை சந்தித்தனர்

யாழ்ப்பாணம் எம். பி. திரு. யோகேஸ்வரனை இத் தூதுக்கோஷ்டியினர் சந்தித்து கலந்துரையாடினர் (க)

### ஆறுதல் கூறினர்

அரியாலை, வெள்ளி

யாழ்ப்பாணத்திற்கு வந்துள்ள கொழும்பு அத்தியட்சாதீன ஆர்ச்டீக்கன் வண. பிதா சுவீடின் பெர்ணன்டோவும், குருநாகல் அத்தியட்சாதீன ஆர்ச்டீக்கன் வண. பிதா அமரசேகராவும் தென்னிலங்கையிலிருந்து வன்செயல்களால் பாதிக்கப்பட்ட நிலையில் தம் உடைமைகளையும் இழந்து நிர்க்கதியான நிலையில் அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கும் அகதிகளை நேரில் கண்டு கலந்துரையாடி ஆறுதல் கூறினர்.

யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் வண. பிதா யே. யே. ஞானப்பிரகாசத்துடன் அகதிகள் தங்கியிருக்கும் முகாம்களுக்கு இவர்கள் விஜயஞ்செய்தனர்.

### யாருடைய பணம்?

கொழும்பு, வெள்ளி

கோட்டை நீகல் தியேட்டருக்கு முன்னால் சி. ஐ. டி. பொலிஸ் அதிகாரிகள் பெருந்தொகைப் பணத்தைக் கைப்பற்றியுள்ளனர்.

இப்பணத்திற்கு உரியவர்கள் கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் அத்தாட்சிகாட்டிப் பெற்றுக் கொள்ளலாம் என்று பொலிஸ் தலைமைக்காரியாலயம் தெரிவித்துள்ளது.

### கதிர்காமம் வரை ரயில்பாதை: கமிஷன்நியமனம்

கொழும்பு, வெள்ளி

மாத்தறை வரை உள்ள ரயில் பாதையை கதிர்காமம் வரை நீடிப்பது தொடர்பாக ஆராய்வதற்காக 7 அங்கத்தவர்கள் கொண்ட விசேட குழு ஒன்றை போக்குவரத்து அமைச்சர் ஜனப் எம். எச் முகமத் நியமித்துள்ளார்

நிதி, போக்குவரத்து, திட்டமிடல், அமைச்சுக்கள், மின்சாரப்பகுதி, ரயில்வேப்பகுதி ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர். (இ)

### பாதிக்கப்பட்ட தமிழர்
# புனர்வாழ்வு நிதி

தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக்கான பிரஜைகள் குழுவின் நிதிக்கு பொதுமக்களிடமிருந்து இதுவரை ரூபா 73526 27 சதம் கிடைத்துள்ளது. இந்நிதிக்கு பணம் செலுத்த விரும்புகிறவர்கள் இலங்கை வர்த்தக வங்கி யாழ். கிளை கணக்கு இல. 3840/-க்கு நேராகச் செலுத்தலாம் அல்லது பொருளாளர்களான யாழ். வர்த்தக வங்கி முகாமையாளர் திரு லங்கா நேசையா அல்லது சீமாஸ் இன்டஸ்றீஸ் நிர்வாக இயக்குநர் திரு. ஆர். ஜே குணரத்தினமிடமும் செலுத்தலாம்.

| | |
|---|---|
| ஏற்கனவே சேர்ந்த நிதி ரூபா | 69069-44 |
| இலங்கை வர்த்தக வங்கி ஊழியர்கள், யாழ். கிளை | 745-00 |
| முள்ளைத்தீவு மக்கள் வங்கி ஊழியர்கள் | 65-00 |
| தபால் மூலம் கல்வி பயிலும் யாழ். கணித டிப்ளோமா மாணவர் மன்றம் | 115-00 |
| நிற்சாமம் இளைஞர் முன்னேற்றச் சங்கம் சங்கானை | 170-00 |
| பி. வி. கணேசநாதன் Zambia | 1000-00 |
| வை. பழனியாண்டி, போகவந்தலாவை | 50-00 |
| செங்குந்த இந்துக் கல்லூரி, திருநெல்வேலி | 556-00 |
| உடுவில் மான்ஸ் த க. பாடசாலை | 30-00 |
| கைதடி நுணுவில் தமிழ்ப் பாடசாலை | 40-00 |
| பெரியவிளான் றோ. க. த. க. பாடசாலை, இளவாலை | 45-00 |
| மல்லாவி அ. த. க. பாடசாலை, யோகபுரம் | 110 00 |
| வட்டு. மேற்கு அ. மி. த. க. பாடசாலை | 56-00 |
| இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம் | 271-78 |
| வலந்தலை வடக்கு அ. மி. பாடசாலை, காரைநகர் | 50-00 |
| வரணி மகாவித்தியாலயம் | 100-00 |
| மண்றுடீன் த க பாடசாலை, யாழ்ப்பாணம் | 50-00 |
| அச்சுவேலி வடக்கு பாடசாலை | 15-00 |
| குடத்தனை அ. த. க பாடசாலை | 16 00 |
| விக்னேஸ்வரக் கல்லூரி, கரவெட்டி | 555-00 |
| கட்டைவேலி மெ. மி. பாடசாலை, கரவெட்டி | 50-00 |
| சீனன் கலட்டி ஞானோதய வித்தியாசாலை, அளவெட்டி | 137-05 |
| கணேச வித்தியாசாலை, எழுதுமட்டுவாள் | 110-00 |
| கொக்குவில் மேற்கு சி. சி. த க. பாடசாலை | 25-00 |
| கோண்டாவில் சி. சி. த. க. பாடசாலை | 75-00 |
| குட்டியப்புலம் அ. த. க. பாடசாலை | 20-00 |
| மொத்தம் | 73,526-27 |

# அரசியலமைப்பு திருத்தம்; ஜி. ஜி. காங்கிரஸ் ஆராயும்

யாழ்ப்பாணம், சனி

அரசியலமைப்பு சட்டத்திற்கு அரசு கொண்டுவரும் திருத்தத்தினால் தமிழ் மக்களை எதிர் நோக்கும் முக்கிய பிரச்னைகள்பற்றி தமிழ் ஈழ ஜி.ஜி. காங்கிரஸ் நாளை ஆராயவிருக்கிறது.

கோண்டாவிலிலுள்ள ஜி.ஜி காங்கிரஸ் தலைமைக் காரியாலயத்தில் நாளை மாலை 3 மணிக்கு திரு. ஆர். என். சிவப்பிரகாசம் தலைமையில், நடைபெறவிருக்கும் கருத்தரங்கில் இவ் விஷயம் ஆராயப்படும்

இக்கருத்தரங்கிற்கு அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

ஜி.ஜி. காங்கிரஸ் செயலாளர் திரு சி. பி. வி கெ. முதலியார் இக் கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளார் (க)

### திருக்குறள் போட்டி

யாழ்ப்பாணம், சனி

அச்சுவேலி சனசமுக நிலையத்தின் விவாதமன்றக் குழு இன்றுகாலை, 5 வயது தொடக்கம் 15 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு திருக்குறள் மனனப் போட்டியொன்றை நடத்துகின்றது. இப்போட்டி மாதா மாதம் நடைபெறுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

### சிரமம்

வேலணை, வெள்ளி

வேலணை எரிபொருள் விற்பனை நிலையத்தில் மாதக்கணக்காக 'சுப்பர்' ரக பெற்றோல் வாங்கிக்கொள்ள முடியாமல் இருக்கின்றதாம்.

இதனால் வாகனச் சொந்தக்காரர்கள், மீன்பிடியாளர் இந்த ரக பெற்றோலைப் பெற யாழ்ப்பாணம் செல்லவேண்டியுள்ளதாம். (உ)

### கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம்ஸ்ரான்லி வீதியில் உள்ள வர்த்தகர்களின் ஆலோசனைக் கூட்டமொன்று இம்மாதம் 5-ந் தேதி மாலை வாக்கர் அன் சன்ஸ் ஸ்தாபனத்தில் நடைபெறவிருக்கிறது. இக்கூட்டத்தில் வர்த்தக நிலையங்களின் பாதுகாப்புப்பற்றி ஆலோசிக்கப்படும். (க)

### இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

அக்டோபர் புரட்சியின் 60வது நிறைவுவிழாவை யாழ் நகரில் கொண்டாட இலங்கை சோவியத் நட்புறவுச் சங்க யாழ். கிளை ஏற்பாடுசெய்துள்ளது.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று கிளைச் செயலாளர் சட்டத்தரணி திரு. சிவா. கணேசனின் இல்லத்தில் இன்று நடைபெறவிருக்கிறது. (கூ-உ)

### டின் உதவுமாறு கோரிக்கை

சாவகச்சேரி, சனி

பாதிக்கப்பட்ட தமிழர் புனர்வாழ்வுச் சபை இம்மாதம் 14, 15 ந் திகதிகளில் அனுஷ்டிக்க விருக்கும் கொடித்தினத்தையொட்டி, நிதிசேகரிப்பதற்கான 1முத்தல்மா டின்களை சேகரித்து உதவுமாறு சாவகச்சேரித்தொகுதி பொது நல நிறுவனங்களையும், சமூகப் பணி நிலையங்களையும், சாவகச்சேரித் தொகுதி புனர்வாழ்வு நிதி சேகரிப்பு அமைப்பாளர் சட்டத்தரணி திரு செ. அம்பிகைபாலன் கோரிக்கை விடுத்துள்ளார்.

### இறைவரி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி

யணிந்தனர்.

இக் கோஷ்டியினர் பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் கழகத் தலைவர் டாக்டர் க பாலசிங்கத்தையும், மற்றும் கழக நிர்வாகிகளையும் சந்தித்து கலந்துரையாடினார்கள். (க)

### இடமாற்றம்...

( 6-ம் பக்கத்தொடர்ச்சி)

விண்ணப்பங்களை, ஆராய்வதற்காக, சங்கப் பிரதிநிதிகள் மீண்டும் 3-ம் திகதி காலை இறைவரி திணைக்கள ஆணையாளர் அதிபதியை சந்திக்கவிருக்கின்றனர்.

இப்பேச்சுவார்த்தையின் போது பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் கழக பிரதிநிதி ஒருவரும் கலந்து கொள்வார்.

### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
# இடம் பெயர்ந்த ஆசிரியர்களுக்கு விசேட அறிவித்தல்

இடம் பெயர்ந்த ஆசிரியர்கள் சம்பந்தமாக கல்வி அமைச்சில் நடத்திய பேச்சுவார்த்தை தொடர்பான சகல விடயங்களையும் அறிவிப்பதற்காக 2-10-77 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1-00 மணிக்கு யாழ். வீரசிங்க மண்டபத்தில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
ந. பாலசுப்பிரமணியம்
பொதுச்செயலாளர்

29 ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கை
யாழ்ப்பாணம்.
30-9-77. 7270

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவ்கோவில் மேல்வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu Telephone 389, Registerd as News paper in Sri lanka.